IN THE COURT OF II JUDGE, SMALL CAUSES AT CHENNAI – 104

MCOP. No.8072/2018 P.W- 1

Deposition of witness for the petitioner solemnly by Tmt. Vanitha in accordance with the provision of Act 1 of 1873 on 21.11.2024.

Name : Sunil Kumar

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

நான் தாக்கல் செய்த ம.சா.ஆ.1 விபத்து பதிவேட்டில் விபத்து நடந்த இடம் எழுதப்பட்டு அது அடிக்கப்பட்டு அதன்மேல் வேறு ஒரு இடம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். கோடம்பாக்கம் பிரிட்ஜ் என்று எழுதப்பட்டதை கோடம்பாக்கத்தை அடித்துவிட்டு அதன்மேல் இரங்கராஜபுரம் இரயில்வே என்று எழுதப்பட்டுள்ளது. விபத்து பதிவேட்டில் இரண்டு காயங்கள் மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.1 விபத்து பதிவேடு கொடுக்கப்பட்ட மருத்துவமனையில் நான் எத்தனை நாட்கள் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டேன் என்றால் விபத்து ஏற்பட்ட உடனேயே பொதுமக்கள் என்னை அந்த மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றனர், அன்றைய தினம் இரவே நான் மியாட் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து செல்லப்பட்டேன். மேற்படி ம.சா.ஆ.1 விபத்து பதிவேட்டில் எனக்கு எலும்பு முறிவு ஏற்பட்டதாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் முறிவு பற்றி குறிப்பிடப்படாவிட்டாலும் காலில் காயம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. எலும்பு முறிவுக்கான அறிகுறி அதில் காணப்படவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் காப்பீடு இருந்ததா என்றால் ICICI Lombard நிறுவனத்தின் மருத்துவ காப்பீடு குடும்பத்தார் அனைவருக்கும் ரூ.2,00,000/-க்கு இருந்தது. நான் மருத்துவ செலவுக்கான இழப்பீடுகளை அதிகம் பெறுவதற்காக அதிகம் செலவு செய்ததாக மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.5 புகைப்படம் எங்கு எடுக்கப்பட்டது என்றால் நீதிமன்ற வளாகத்தில் எடுக்கப்பட்டது. விபத்து நடந்த பிறகு காயங்களை காண்பிக்கும்விதமாக எந்த புகைப்படமும் எடுக்கப்படவில்லை என்றாலும் வழக்கு தாக்கல் செய்தபிறகுதான்

புகைப்படம் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். ம.சா.ஆ.8 மற்றும் 11 ஆவணங்கள் வழக்கிற்காக விபத்திற்கு பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் இந்த ஆவணங்கள் 2021ல் பெறப்பட்டது வழக்கிற்காக தயாரிக்கப்படவில்லை. ம.சா.ஆ.13 ல் எனக்கு முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தை நான் இடித்துவிட்டதாக காணப்படுகிறது என்றால் சரியல்ல. நான் இடித்துவிட்ட காரணத்தினால்தான் அந்த இருசக்கர வாகனத்தில் சென்ற நபர்கள் கீழே விழுந்துவிட்டனர் என்றால் சரியல்ல. நான் புகாரிலும் பிரமாண வாக்குமூலத்திலும் எதிர்மனுதாரரின் வாகனம் வேகமாகவும் அஜாக்ரதையாலும் வந்ததாக குறிப்பிட்டுள்ளேன், அந்த சாலையின் வேக அளவு எவ்வளவு என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சாலையின் வேக அளவு தெரியாத நிலையில் எதிர்மனுதாரர் வாகனம் அதிவேக வந்தது என்று நான் குறிப்பிடுவது தவறானது என்றால் சரியல்ல. மேம்பாலத்தின் மீது ஏறுகிற எந்த வாகனமும் அதிவேகமாக போகமுடியாது என்றாலும், நான்தான் இறங்கும்போது அதிவேகமாக வந்து முன்னால் சென்ற மூன்று சக்கரவாகனத்தை முந்த முயன்றபோது Balance தவறி கீழே விழுந்துவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் மூன்றுநபர்கள் பயணம் செய்ததால்தான் Balance தவறி கீழே விழுந்து இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நிலை தடுமாறி கீழே விழுந்த காரணத்தினால்தான் எனக்கு காலில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் காரின் காரணமாக இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் Oneway ல் தவறாக பயணம் செய்ததால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்தானது முழுக்கமுழுக்க என்னுடைய அஜாக்ரதையால்தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்து தொடர்பாக காவல்துறையினர் தயார் செய்த மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆகியவற்றில் நான் ஓட்டி வந்த வாகனம் பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. இந்த விபத்திற்கு எதிர்மனுதாரர் வாகனம் காரணம் இல்லாத நிலையில் இழப்பீடு அதிகம் கேட்டு தவறாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த விபத்தினால் ஏற்பட்ட காயங்களின் காரணமாக எனக்கு எந்த வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

என்னுடைய வருமான வரி கணக்கு விவரத்தில் முன்பைவிட தற்போது அதிக வருமானம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் என்னுடைய வருமானம் அதிகமாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றாலும் தற்போது நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த விபத்திற்கும் எதிர்மனுதாரருக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்பதால் அவர்கள் எனக்கு எந்த இழப்பீடும் தரத்தேவையில்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது**.

Sd./
Signature of witnes

**சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக் கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.**

Sd./
II Judge
Court of Small Causes,
Chennai